**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**STC.No. 2032/2024**

**Prosecution Witness : PW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வேங்கடசுப்பிரமணியன் | **Caste** | : | |
| **Father's Name** | : | ரத்தினம் | **Calling** | : | **Security** |
| **Village** | : | மருத்துவர் காலனி, திண்டுக்கல் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **15.09.2025** |

**15.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி – 5– திரு.வேங்கடசுப்பிரமணியன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் மருத்துவர் காலனியில் குடியிருந்து ரத்தினம் லாரி செட்டில், செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 11.05.2024 ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியிலிருந்து 2.00 மணி இருக்கும் தாலுகா காவல்நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் நாங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகே வந்தார்கள். டிமார்ட் அருகே நடந்த விபத்து சம்மந்தமாக வரைபடம் வரைந்து விசாரித்து எங்களிடம் கையொப்பம் வாங்கி சென்றார்கள். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

11.05.2024 அன்று நான் எங்கே வேலை பார்த்தேன் என்றால் ரத்தினம்லாரி செட்டில் வேலை பார்த்தேன். ரத்தினம் லாரி செட் எங்கே உள்ளது என்றால் திண்டுக்கல் திருச்சி ரோட்டில் உள்ளது மற்றும் புறவழிச்சாலையாகவும் உள்ளது என்றால் சரிதான். அது கார்னர் கபே என்ற கடைக்கு அருகே உள்ளது என்றால் சரிதான். அங்கே வைத்து தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் வேலை பார்த்த இடத்திற்கும் டிமார்ட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் 100 மீ தொலைவு இருக்கும்.

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.15 17:39:25 +0530

Judicial Magistrate No.I

Dindigul.